திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கக்கூடியதை ஹாஸ்பிட்டல் என்று சொன்னார்கள். ஆனால் அங்கே எக்ஸ்ரே, ப்ளட் டெஸ்ட், யூரின் டெஸ்ட், இ. சி. ஜி. போன்ற வசதிகள் எதுவும் இல்லை. வெறும் டாக்டர், டாக்டர் அம்மா, இரண்டு பேர்தான் இருக்கிறார்கள். அத்தோடு ஒரு ரெக்கார்ட் கிளார்க் இருக்கிறார். அத்தோடு ஒரு பீமேல் அட்டெண்டர் இருக்கிறார். அந்த சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய அரசினர் தோட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் மக்கள் தான். எனவே பக்கத்திலே ஹாஸ்பிட்டல் இருக்கிறது என்பதற்காக இந்த மருத்துவமனையில் எதுவும் இல்லாத நிலை இருப்பது சரியல்ல. ஆகவே இங்கே எல்லா வசதியும் செய்து கொடுக்க அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருந்தகம் பெரும்பாலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்றே உருவாக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக முதலுதவி செய்கிற மருத்துவமனையாக மட்டுமே அது செயல்படுகிறது. தேவைப்படுமேயானால் உடனடியாக அவர்களை எடுத்துச் செல்வதற்கு நோயாளி ஊர்தி ஒன்றும் தயார் நிலையில் வைக்கப்பட்டு இருக்கிறது. ஆக இப்படி அவர்களை எடுத்துச் செல்வதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இதை மேம்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

*3247—திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மணவாளக்குறிச்சியிலும், ஆளூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அவை தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). கன்னியாகுமரி மாவட்டம் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மணவாளக்குறிச்சியிலும், ஆளூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது அமைப்பதற்கு சாத்தியம் இல்லை.

1990 ஏப்ரல் 24]

10–00 மணி

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சியிலும், ஆளூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது என்பது மிகவும் தேவையான ஒன்று. காரணம் இந்த ஆளூர் கிராமத்திலே பெரும்பாலும் அரிஜனப் பெருங்குடி மக்களும், மணவாளக்குறிச்சியில் மீனவப் பெருங்குடி மக்களும் அதிகமாக வாழ்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு மருத்துவ வசதி கிடைக்க வாய்ப்பாக இந்த இரண்டு இடங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்க அரசு மறுபரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திலே ஏற்கெனவே, முட்டம், குருந்தன்கோடு, வெளிச்சந்தை மற்றும் சேனம்விளை ஆகிய 4 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. மேலும் இந்த ஆண்டு நடுவூர்கரை கிராமத்திலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரே ஊராட்சி ஒன்றியத்திலேயே 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருப்பதால் மேலும் அங்கே உருவாக்குவதற்கு வாய்ப்புகள் இல்லை. 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒன்று என்ற அடிப்படையிலே அங்கே இவை நிறுவப்பட்டிருக்கின்றன. 20 ஆயிரம் மக்களுக்கு ஒன்று என்று விரிவுபடுத்துகிற நிலை வருகிறபோது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு ஏற்றுக் கொள்ளும்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சி, ஆளூர் இரண்டிலும் அமைக்காவிட்டாலும், ஆளூரில் மாத்திரமாவது அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் அங்கே இருக்கின்ற மக்கள் இன்றைக்கு நாகர்கோவிலுக்குச் சென்று சிகிச்சை பெறுகிறார்கள். அப்படி இல்லையென்றால் பத்மநாபபுரத்திற்குச் சென்று சிகிச்சை பெறுகிறார்கள். ஆளூரைப் பொறுத்த வரையிலும், ஆளூர் கிராமத்தையும், வில்லுக்குறியையும் சேர்த்து அங்கே 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கிராமங்களில் வாழ்வதால் இதை மறுபரிசீலனை செய்து அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான கருத்துருவைப் பரிசீலிக்கிற போது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையும் இந்த அரசு பரிசீலிக்கும்.